11th August 1960]

டைரெக்டர் பதவியையும் விட்டு அவரை உடனே விலக்குவதற்கு உத்தரவு போட்டுள்ளது என்பது தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON SRI R. VENKATARAMAN: இருபத்தி இரண்டு வருஷங்களுக்கு முன் அவர் மீது குற்றம் சாட்டி இருந்தது என்ற தகவல் இருக்கிறது. ஆனால் அவர் வேறு காரணத்திற்காக நீக்கப்பட்டிருக்கிறார். அவர் அப்பீல் செய்திருக்கிறார்

SRI S. M. ANNAMALAI: அந்த சூபர்வைசர் அந்த தாலூகாவில் 200 ரூபாய் கோர்ட்டு மூலம் அபராதம் விதிக்கப்பட்டு, பைன் போட்டுக் கட்டியிருக்கிறார். அப்படிப்பட்ட சூப்பர்வைசரை நீக்காமல் அவரை மறுபடியும் பாங்குக்குத் தலைவராக நியமித்தால் அந்த பாங்கு சரிவர நடக்குமா? அவருடைய அப்பீல் பரிசீலனை செய்யப்பட்டதா?

THE HON SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்கள் தயவு செய்து அவர் என்ன உத்தியோகம் வகித்தார், எப்பொழுது தண்டிக்கப்பட்டார் என்பதைப்பற்றிய முழு விவரத்தையும் எழுதி அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

The Madras Agricultural Produce Markets Act, 1959

Q.—**SRI V. K. KOTHANDARAMAN**: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) புதிதாக நிறைவேற்றப்பட்ட "The Madras Agricultural Produce Markets Act *1959*" அமுலில் வந்துவிட்டதா?

(ஆ) இல்லையென்றால், ஏன்?

(இ) மார்க்கெட் ஏரியா (area) எவ்வளவு?

(ஈ) அதை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

(*b*) Rules under the Madras Agricultural Produce Markets Act, 1959 have to be framed and they are under examination. Further, the Government have decided that the Madras Agricultural Produce Markets Act, 1959 should be brought into force only after the Market Committees are reconsituted in accordance with the provisions of the existing Act (namely, the Madras Commercial Crops Markets Act, 1933) and steps to reconstitute the Market Committees by way of holding election are under way.

(*c*) & (*d*) It is presumed that the number refers to the "notified" market area mentioned in sub-section (4) of Section 5 of Madras Act 23 of 1959. Market area has to be specified by the Government by way of notification. The market area will be fixed on the recommendation of the Market Committee and will be dependent on factors, such as availability of transport facilities, places from which the commodities come and other circumstances if any. The question has not yet been taken up.